C.C 230/16
PW 2
பெயர் லீமா
தேதி 04.08.23
**(1**ம் எதிரி ஆஜர் இல்லை**. 1**ம் ம் எதிரி சார்பில் கு**.**வி**.**மு**.**ச**.** பிரிவு **317**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து **1**ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.30.03.16 அன்று எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள் அப்போது நான் கடைக்கு போய்விட்டேன் என்ற விபரத்தை போலிச் விசாரணையில் கூறியுள்ளேன். நான் கடையிலிருந்து வீட்டிற்கு வந்தேன் எதிரிகள் கிளம்பிவிட்டார்கள் என்ற விபரத்தை போலிச் விசாரணையில் கூறியுள்ளேன். எதிரிகள் வந்து நகையை கேட்டவுடன் அப்பா அப்படியே எடுத்துக்கொடுத்துவிட்டார் என்று என் மகள் என்னிடம் சொன்னார் என்ற விபரத்தை போலிச் விசாரணையில் கூறியுள்ளேன். 1ம் எதிரியின் குடும்ப விபரம் அவரது குழந்தைகள் பற்றிய விபரம் எனக்கு தெரியும். 1ம் எதிரியின் மகளை பெண் பார்க்க வருவதாக கூறி நகைகளை கேட்டார்கள் என்று நான் கூறுவது தவறு என்றும், அந்த சமயத்தில் 1ம் எதிரியின் மகளுக்கு 15 வயது தான் நடந்துக்கொண்டிருந்தது என்றால் சரிதான். 12ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தது. என் கணவர் நகையை திருப்பி கேட்டபோது அவர்கள் என் கணவரை கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்ற விபரத்தை போலிச் விசாரணையில் கூறவில்லை. நான் சொன்னது போல் 1ம் எதிரி மற்றும் அவர் கணவரிடம் என் கணவர் எந்த நகையும் கொடுக்கவில்லை என்றாலும், என் கணவர் பணிபுரிந்த வங்கி மீது 1ம் எதிரி வழக்கு தொடுத்ததன் காரணமாக என் கணவரும் அவரின் உயர்அதிகாரிகளும் காவல்துறையினரால் ஏற்படுத்தப்பட்ட பொய் புகாருக்கு ஆதராக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் 1ம் எதிரி தன் மகளுக்காக எந்த நகையும் பெற்றுக்கொள்ளவில்லை என்றும், என் கணவரை கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல.